# கற்பகம்



மார்கழி 1989.

விலை ரூ. 4-00

# கற்பகம்

மார்கழி

1989

*மலர் — 10*

*இதழ் — 6*

*வெளியீடு :*

வடமாகாண

தெ.ப. பெர கூட்டுறவு சங்கங்களின் சமாஜம்,

330, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22713

*ஆசிரியர் :*

கே. வி. நடராஜன்

*அச்சாளர்கள் :*

*உமா பிறிண்ட்டேர்ஸ்*

*32,*

*நல்லூர் குறுக்கு வீதி*

*நல்லூர்.*


# புத்தொளி வீசட்டும்!

1989-து பாலன் பிறப்புடனும்—நத்தார் பண்டிகையுடனும் 1990—ம்ஆண்டு பிறக்கப் போகின்றது. முடியும் எண்பத்தொன்பது எதிர்பார்த்த விளைவுகளை—நன்மைகளைத்தராது பெரும் ஏமாற்றத்தையே பல விஷயங்களிலும் தந்து மறைகின்றது.

பிறக்கப் போகும் 90-ம்ஆண்டும் துவண்டு போய் — தொண்ணூறும் சென்ற துவண்ட கிழவனாக-தளர்நடை போடப்போகின்றதா? அல்லது துடிதுடிப்புடன் செயலாற்ற வல்ல புதிய உத்வேகத்துடனான புத்தொளிவீசும் ஆண்டாக மலரப்போகின்றதா? என்பதை இப்போதே நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால் நாட்டு நடப்பையும்—போக்கையும் பார்க்கின்றபோது எதிலும் தெளிவில்லாத ஒரு தளர்நிலையும்-மனச்சோர்வுமே தெரிகின்றது.

ஒளியின்றி — சோபையின்றி ஒரே அமாவாசை இருள்மயமான கடந்த பல ஆண்டுகளை நாம் பார்த்து விட்டோம். திட்டங்கள் வகுத்து செயலாற்றவென கங்கணம் கட்டி நின்று அவ்வாண்டுகள் தந்த துயர முடிவுகளை நினைத்துப் பார்க்கின்றோம். எம்மை அறியாமலே போட்ட திட்டங்களுக்கு எதிர்மாறாக எங்கெல்லாமோ அரசியல் நீரோட்டச்சுழி—எம்மை இழுத்துச் சென்று திகைப்பூட்டியதை எல்லாம் மறந்து விடுவதற்கில்லை.

இந்த நிலையில் 90-ம் ஆண்டையும் முற்று முழுதான தீர்க்கதரிசனத்துடன் சொல்லா விட்டாலும் — கடந்த ஆண்டுகள் தந்த அவநம்பிக்கை 90-ம் ஆண்டும் தந்து விடக்கூடாதே என்ற பிரார்த்தனையுடன் செயலாற்றத் தொடங்குவோம்.

இந்தப் பின்னணியில் எமது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களைச் சற்று நோக்குவோம்.

இச்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்ட நோக்கமும் செயற்பாடுகளும் கடந்த ஆண்டுகளில் திசைமாறி அவை உயிர் வாழ்வதற்காக என்னென்னவோ எல்லாம் செய்ய வேண்டியதாயிற்று. அதனால் தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச்சங்கங்கள் என்ற பெயரை அவை முற்றுமுழுதாக அழிந்துவிடாமல் மரணத்தறுவாயிலிருந்து மீட்டெடுத்த பெருமை இச்சங்கங்களின் அங்கத்தவர்கள், நிர்வாகிகள், பணியாளர்கள் ஆகியோரைச் சார்ந்ததாகும்.

உலகில் எங்குமே இல்லாத இந்தப் புதிய அமைப்பான இச்சங்கங்கள் புறமுதுகிட்டு ஓடிவிடலாம்—அல்லது முற்றாகச் செத்தொழிந்து விடும் என நப்பாசை கொண்டிருந்த பலருக்கு இது அதிசயமாகத்தானிருக்கும்.

ஆம், 1990-ல் இச்சங்கங்கள் புத்தொளி பெற்றுவிடத்தான் போகின்றன. சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்ட அடிப்படை இலட்சியங்களான சமூகபொருளாதார கல்விகலாசார மேம்பாட்டுச் சங்கங்கள் என்ற பெருமைக்குரிய பெயரை அவை நிச்சயம் தக்கவைத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு நிறைய உண்டு என்பதற்கு அறிகுறியாக இப்போதிருந்தே எமது புதிய கூட்டுறவு அபிவிருத்தி ஆக்க உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் அவர்கள் சில ஆக்கபூர்வமான ஆலோசனைகளை, சங்கங்களுக்கு வழங்கிவருவது குறிப்பிடக்கூடியதாகும்.

---

**சங்கங்களின் அங்கத்தவர், பணியாளர், கற்பகம் வாசகர், எழுத்தாளர், ஆதரவாளர் அனைவருக்கும்**

**எமது உள்ளம் கனிந்த**

## நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.

— **கற்பகம்.**

# கிறிஸ்துவின் பிறப்பு கூறுவது என்ன!

ஆதிமனிதரான ஆதாம், ஏவாள் இறைவனின் கட்டளையினை மீறிச் செய்த பெரும் பாவத்தினுல் இறைவன் அவர்களைச் சபித்தார். ஆனுல் அவர்களுக்கு "உங்களைப் பாவத்தில் இருந்து மீட்பதற்கு எனது மகனை அனுப்புவேன்" என்று வாக்களித்தார். அந்தநாள் தொட்டு ஒவ்வொருவரும் அந்தக் கிறிஸ்துவின் பிறப்பினைப் பற்றிப் பல வாருகக் கற்பனை செய்து கொண்டு இருந்தனர். சிலர் மாட மாளிகையில், பட்டுப் பீதாம்பரங்கள், பஞ்சு மெத்தைகளில் பிறப்பார் என்றும், சிலர் அவர் ஒரு போர்வீரனுகப் பிறப்பார் என்றும், எதிர்பார்த்தனர். ஆனுல் அந்தக் கிறிஸ்துவின் பிறப்பானது வேறு விதமாக அமைந்தது.

அரசனது கட்டளையின் படி பெத்தலெகேம் நோக்கி சூசையப்பரும் அன்னை மரியாளும் சென்று கொண்டு இருந்தனர். திடீரென அன்னைக்குப் பிரசவவேதனை ஏற்பட்டுத் துடித்தாள். தங்க இடமின்றி தவித்தார் கணவர் சூசை. பணக்கார வர்க்கம் முகத்தை மறுபுறம் திருப்பி விரட்டியது. மார்கழிக் குளிரும் இருளும் ஒருபுறம், மக்களது விரட்டல்

### ✶ ஆண்டவரே வந்திடுவீர்

மார்கழியின் குளிரினிலே
மாமரியின் மடியினிலே
மாசற்று வந்தவனை
மகிழ்வுடன் நாம் துதிப்போம்.

குடில்தனிலே எம்மவர்க்காய்
குழந்தையாய் வந்தவரே
குழந்தைகள் யாம்செய்யும்
குற்றம் எல்லாம் பொறுத்திடுவீர்

மோட்சம்யாம் சென்றிடவே
மோட்சவழியும் காட்டுவீர்
பாலர்யாம் அருள்பெறவே
பாலனே வந்திடுவீர்.

பாவஇருள் சூழ்ந்திட்ட
பாரின் மாக்கள் யாவருமே
பாவம் நீங்கி ஈடேற
பாலனே நீர் வந்திடுவீர்.

அமைதிஇன்றி அலைந்திடும்
அவனிவாழ் மாந்தர் தன்னை
அமைதியாய் வாழவைக்க
ஆண்டவரே வந்திடுவீர்.

**சின்னத்துரை சிவகாந்தன்**

கோப்பாய் தெ. ப. பொ. உ. வி
கூட்டுறவுச்சங்கம்.

மறுபுறம், செய்வது அறியாது திகைத்தார் சூசை. ஈற்றில் ஊரின் ஒதுக்குப்புறத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தை தேர்ந்தெடுத்தனர் இருவரும். மனித உறவுகளை விடுத்து மாடுகளின் மத்தியில் அந்தச் சமாதானத்தின் மீட்பர் பாலகன் உருவில் பிறந்தார்.

நாமும் இன்று அன்னை மர்க்கு இடம் கொடாதவர்களை, திட்டித் திரிகின்றோம். ஆனால் நாமே அந்த யூதர்களைப்போல கிறீஸ்துவை ஓட, ஓட விரட்டுகின்றோம். எவ்வாறெனில் பிச்சைக்கார உருவில் வருபவர்களையும் எமது அயலவர்களையும் விரட்டியடிக்கும்போது கிறீஸ்துவையே விரட்டுகின்றோம். அவரே சொல்கின்றார் "உனது அயலவனுக்கு செய்வதெல்லாம் எனக்கே செய்கிறாய்."

நள்ளிரவு வேளை பனி கொட்டுகிறது ஆலய மணிகள் ஒலிக்கின்றன. கீதங்கள் இசைக்கப்படுகின்றன புத்தாடைகள் புனைந்து கோயிலுக்குச் செல்கிறோம். ஏன்? பாலன் பிறந்துள்ளார் அவரை வணங்குவதற்கு, ஆனால் அவரோ "என்னைத் தேடி இங்கு வராதீர்கள், யாரும் அற்ற பிச்சைக்காரர் உருவிலும், சிறைச்சாலைகளில் சிறைக்கைதி உருவிலும் உங்கள் மத்தியில் நான் இருக்கிறேன். அங்கே அவர்களை ஆதரித்து வேண்டிய உதவிகள் செய்தால் என்னையே வணங்கியவர் ஆவீர்கள்" என்று கூறுகிறார்.

இன்றைய இருபதாம் நூற்றாண்டின் மனித சமூகமானது நாகரீகத்தாலும் பணத்தாசையாலும் தாண்டவம் ஆடுகின்றது. எங்கும் ஒரே போட்டி, பொறாமை, காய்மகாரம், எரிச்சல், சண்டை என்பன அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.

எனவே கிறிஸ்துவின் பிறப்பு விழாவினை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டுமாயின் எமது குடும்பத்திலே, அயலவரிலே, மட்டுமல்லாது உலகம் முழுவதுமே சமாதானம் ஏற்பட வேண்டும். மாட்டுத் தொழுவத்தில்கூட நாம் புத்தாடையுடன் சென்று மெழுகுதிரி கொழுத்துவது சுலபமானது. ஆனால் எமது அயலவனில் இறைவனைக் காண்பது மிகவும் கடினமானது.

மாட்டுத்தொழுவத்தில் அழுக்குகளின் மத்தியிலே தொடங்கிய அவரதுஎளிய சமாதான வாழ்வானது பிறர்வாழ்வுக்காகக் கல்வாரி முடிவுவரை தொடர்ந்தது, அவ்வாறாக எமக்காகதமதுவாழ்வினை தியாகம் செய்த ஏசுபாலன் எம்மையும் ஒருவருக்கு ஒருவர், நாட்டுக்கு நாடு அன்பு செய்து சமாதானமானவாழ்வு வாழுங்கள் என்று அழைக்கின்றார். எனவே நாமும் அவர் வழி வாழ முற்படுவோமாக.

சி. சிவகாந்தன்
தெ. ப. பொ. கூ. சங்கம், கோப்பாய்.

## போதைப்பொருட்கள் பாவித்தல், புகைத்தல்

## மதுபானம் அருந்தல் ஆகியவற்ருல் ஏற்படும்

# தீமைகள்

மனிதனுடைய உடல், உள ஆத்மீக வளர்ச்சி அவனின் வயது உடல்நிலை, பெற்ருேரின்நிலை, உட்கொள்ளும் உணவு, சுற்றுடல், காலநிலை, பழக்கவழக்கங்கள், செய்தொழில் ஆகியவற்றில் தங்கியுள்ளன. எனவே மனிதனின் பூரண வளர்ச்சி சீரான நிலையையடையாவிட்டால் அவன் பிரச்சனைக்குரியவனுகின்ருன். அதன் விளைவாக சமுதாயப் பிரச்சனை ஏற்படுகின்றது. சமுதாயப் பிரச்சனையைக் கட்டுப்படுத்தாதுவிட்டால் அது நாட்டுப்பிரச்சனையாகின்றது. நாட்டுப்பிரச்சனை அளவு கடந்த நிலையை ஏற்படுத்துமாயின், உலகப்பிரச்சனை ஏற்படக்கூடிய நிலைமை உருவாகும்.

மனிதன் தான் பெற்றஅறிவு, அநுபவம், விசேட ஆற்றலின் விருத்தி ஆகியவற்றைக்கொண்டு தனது ஆசைகள், சுயநல மனப்பான்மை ஆகியவற்றை ஓரளவு கட்டுப்படுத்தித் தனக்குதவியாகவும் மற்றவர்களுக்குப் பிரச்சனை ஏற்படுத்தாதும் வாழ்க்கையில்

சி. எஸ். சுப்பிரமணியம்
வளர்ந்தோர் கல்வி அதிகாரி
யாழ். மாவட்டம்

### கிறிஸ்மஸ் தாத்தா



சந்தாகிளாஸ் இல்லாத கிறிஸ்மஸ், நட்சத்திரம் இல்லாத வானம் போல் கருதப்படும். அன்பையும் மகிழ்ச்சியையும் உருவகப்படுத்தினுல், அந்த உருவந்தான் சந்தாகிளாஸ்.

அவர் வடதுருவத்தில் வசிப்பவர். கலைமான்கள் பூட்டிய சறுக்கு வண்டியில் வருவார். பரிசுப் பொருட்களைத் தன் காற்சட்டைப் பையில் திணித்துக் கொண்டு வந்து குழந்தைகளுக்கு வாரி வழங்குவார்.

செயல்படுத்தக்கூடிய ஓர் சீரான சூழ்நிலையை உருவாக்கினுல் அவனின் சமுதாயம் சீர்திருத்தமடைந்து சிறப்பாக அமையும்.

பிறப்பு, இறப்பு இவ்விரண்டும் இயற்கையானவை. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தை சீரான நிலையில் பூரண வளர்ச்சிக்குரிய வழியில் அமைப்பதற்கும் போதிய அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் பரந்த நோக்குடன் கடமையுணர்ச்சிடன் சேவை மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு பேதமை, அறியாமை. அனுபவமின்மை ஆகியவற்ருல் உந்தப்பட்டுச் செயற்பட முன்வரும் சிறுர்களுக்கு வழிகாட்டிகளாக அமைவது சாலவும் சிறந்ததாகும்.

விஞ்ஞானமானது நேரத்தைக் கட்டுப்படுத்தி சகல வசதிகளையும் சௌபாக்கியத்தையும் ஏற்படுத்தி மனிதனின் வாழ்க்கை சீரான முறையில் அமைய வழி வருகின்ற அதேநிலையில் மனிதனை அழிவுப்பாதையில் இட்டுச் செல்லக்கூடியதாகவுமுள்ளது. மனிதாபிமானம், பரந்த நோக்கு சேவை மனப்பான்மை, சமயப் பற்று, ஆத்மீக வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்டு சமாதானத்தையும் ஒற்றுமையையும் பேணிக் காக்கும் நோக்குடன் விஞ்ஞானத்தை ஆக்கப் பாதையில் அமையச்செய்வதற்கு மிகக்கூடிய அறிவும் அனுபவமும் பெற்றவர்கள் முயற்சி எடுத்தால் நயமானது. சமுதாய, பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்கு வித்திட்டதாக அமையும்.

மனிதனின் உடலையும் உணர்ச்சியையும் செயற்பாட்டையும் மனப்பாங்கையும் பாதிக்கக்கூடிய நிலையில். போதைப்பொருட்களும் புகைத்தலுக்குரிய பொருட்களும் மதுபானங்களும் விஞ்ஞான வாயிலாகக் கண்டுபிடிக்கப்பட்டு மனித சமுதாயத்தில் கட்டுக்கடங்காத பிரச்னைகளை உருவாக்கியுள்ளன.

மதுபானங்களில் காணப்படும் போதைப்பொருள் எதையில் அற்ககோல் அல்லது எதனேல் ஆகும். பழவகைகள், காய்கறிவகைகள், தானியங்கள், ஆகியவற்றினுலும், தென்னை, பனை, கித்துள் போன்ற மரங்களிலிருந்தும் மதுபானங்கள் தயாரிக்கக்கூடியதாக உள்ளது. பியர் பானத்தில் கனவளவு ரீதியாக 5 வீத அற்ககோலும் சாதாரண உவைன்களில் 10-14 வீதமும் செறி, போட், வே'மவுத் போன்ற உவைன்களில் 14 – 20 வீதமும் உவிஸ்கி, றம், ஜின் போன்றவற்றில் 40வீத அற்ககோலுமுண்டு.

ஒரு நேரத்தில் எடுக்கப்படும் மதுபானத்தின் அளவைக் கொண்டே அதன் தாக்கம் உடலில் ஏற்படும். அத்துடன் ஏற்கனவே பாவித்ததின் காரணமாக ஏற்பட்ட அனுபவம், பாவித்த இடம், சந்தர்ப்பம், உணர்ச்சி, தொழிற்பாடு, சூழல் எப்படிப்பட்ட மக்கள் மத்தியில்

ஆகியவற்றைக்கொண்டே உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் மாற்றங்கள் எற்படும். ஏதனேல்

## உழைப்பு

சிந்தனையிலிருந்து செயல் பிறக்கின்றதா — செயலிலிருந்து சிந்தனை பிறக்கின்றதா! என்னயிது முட்டையிலிருந்துகோழி வந்ததா கோழியிலிருந்து முட்டை வந்ததா என்ற சங்கதியாயிருக்கின்றதே என நினைக்கின்றீர்களா? அப்படியல்ல. இதற்கான விடை செயலூக்கம் சிந்தனையாற்றல் மிக்க மனிதர்களைப் பரீட்சிப்பதன்மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இன்றைக்கு நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்உலகம், உபயோகிக்கும் பொருட்கள் செயலூக்கம் மிக்கவர்களினுல் உருவாக்கப்பட்டு பின்னர் அவற்றின் செயல் திறன் அவதானிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டவையே,

ஆகவே முதலில் செயல்! அவற்றின் மூலம் பெறப்படும் அநுபவம், அநுபவத்தின் மூலம் பெறப்படும் அநுபவ அறிவு, மீண்டும் மறுசீரமைக்கப்பட்ட செயல் திறன். இப்படியே மனிதகுலம் கோடினுகோடி ஆண்டுகளாகப் பெற்ற செயல் திறனே அறிவு! சிந்தனை!!

கடின உழைப்பே அறிவு! சிந்தனை!

ஆனது உட்கொண்டபின் குருதியிலுள்ள அளவைப் பொறுத்து தலையிடி, நிதான மற்ற நிலை, வாந்தி எடுத்தல், மயக்க நிலை ஆகியன ஏற்படும். அற்கசோலுடன் வேறு போதைப்பொருட்களை உள்ளெடுத்தால் பலவிதமான விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுமுண்டு. கூடியளவு மதுபானம் அருந்துபவர்கள் பசி ஏற்படுதலை இழக்கின்றனர்.

உயிர்ச்சத்துக் குறைபாடு, வயிற்றில் எரிவு, தோலில் மாற்றங்கள், உறுப்புக்கள் சரியாகத் தொழிற்படாத நிலை, பாலியல் குறைபாடுகள், ஈரல் தாக்கப்படுதல், இதயம் இயங்கும் ஒழுங்கீனம், குருதிக்கலன்கள் தாக்கப்படுதல்ஆகியன ஏற்படும். இதன் விளைவாக ஞாபகக்குறைவு அவதானக்குறைவு நிரந்தரமாக ஏற்படலாம்.

**குருதியில் அற்ககோலின் வீதமும் அதன் விளைவுகளும்**

0·05% - 0·4%
நரம்புத்தளர்ச்சி, தடுமாற்றம்
0·27% - 0·44% — மயக்கம்
0·36% - 0·45—உணர்ச்சியின்மை
0·45% - இற்குமேல் மரணம்.

மிகக்கூடியளவு மதுபானம் வருடக்கணக்காக அருந்துபவர்கள் புற்றுநோய், இதயநோய், ஆகியவற்றின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். ஆனுல் மது அருந்தும் பழக்கத்துடன் புகைத்தலும், சேருமானுல் பாதிப்பு மிகக்கூடிய

தாகவிருக்கும். காரணம் கலோரிப் பெறுமானம் கூட்டப்படுகின்றது, ஆய்வின் மூலம் மது அருந்துதலையும் புகைத்தலையும் பழக்கமாகக் கொண்டவர்கள்,சுவாச உறுப்பு, தொண்டை, வாய், உணவுக் குழாய் ஆகியவற்றில் புற்றுநோய், இதயத்திலும் ஈரலிலும் நோய்கள், நரம்பு வியாதி, மூளை வியாதி போன்றவற்றால் பாதிக்கப்பட்டும் இறந்தும் இருக்கின்றனர். சிலர் தற்கொலை புரிந்துள்ளனர். மதுவை அருந்துவதற்குரிய காரணங்கள்;

1. சமூகக்கூட்டங்களை களியாக்குதற்கு.
2. ஓய்வெடுத்தற்கு.
3. துயிலுவதற்கு.
4. சமூக ரீதியாக அல்லது உடல் ரீதியான சௌகரியங்களைக் குறைப்பதற்கு.
5. நீர்த்தாக்கங்களைக் குறைப்பதற்கு.
6. சமிபாட்டைக் குறைப்பதற்கு
7. துக்கத்தைக் குறைப்பதற்கு.
8. விரக்தியை அகற்றுவதற்கு.
9. அவாக்களைக் குறைப்பதற்கு.
10. உற்சாகத்தைக் கூட்டுவதற்கு.
11. கடபொறுப்பில்லாது விடுவிக்கவும்போன்றவையாகும்,

இளைஞர்கள் தங்களுடைய பெற்றோர்கள் மது அருந்தும் பழக்கத்தைப் பின்பற்றுவதினாலும் வளர்ந்தவர், சிநேகிதர் ஆகியவர்களைப் பார்த்துப் பழகுவதனாலும் தாக்கப்படுகின்றனர்.

சிகரெட் புகைத்தல் பதினாறும் நூற்றாண்டு பிற்பகுதியில் போர்த்துக்கேயரால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது. புகைத்தலால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மக்கள் அறிந்திருந்தும் அவர்கள் அப்பழக்கத்தைக் குறைப்பதற்கு ஆக்கபூர்வமான முடிவை எடுத்துச் செயற்பட சமுதாய, பொருளாதார அரசியலமைப்பு சுபீட்சகரமாக அமையவில்லை.

சிகரெட் புகையானது பல வாயுக்களையும் நுண்படிவுகளையும் கொண்ட கலவையாகும். புகையை உள்ளெடுக்கும் பொழுது 50% வீதசுவாச உறுப்புக்களில் படிந்தும், சில நுண்படிவுகள் சுவாசக்குழாயிற் தங்கியுமிருக்கும். இப்புகையானது ஏறத்தாழ 1000 சேர்வைகளைக் கொண்ட சிக்கலான அமைப்பாகும். இப்புகை சற்று அமிலத்தன்மையுள்ளது. ஆனால் புகையிலைச் சுருட்டுப்புகை காரத்தன்மையானது. சுருட்டுப்புகை உள்ளெடுப்பது குறைவாகும். எனவே சுருட்டுப் புகைத்தலால் ஏற்படும் அபாயம் சிகரெட் புகையிலும் பார்க்கக் குறைவாகவுள்ளது.

சிகரெட் புகையிலுள்ள கூறுகளாவன;

1. நிக்கொற்றின் – புகையை உள்ளெடுக்கும் பொழுது

90% அளவு உறிஞ்சப்படுவதினுல் இதயம், குருதிக்கலன்கள் சமீபாட்டுக்குழாய், சிறுநீரகம், நரம்புத்தொகுதி ஆகியன தாக்கப்படுகின்றன

2. தார் போன்ற நுண்படிவுகள் புற்றுநோய்க்குக் காரணமாகவுள்ளன.

3. எரிவுகள் - சுவாசக்குழாய்களைத் தாக்கக்கூடியவை.

4. காபனீரொட்சைட்டும் ஆதெனிக்கும் மிகக் குறைந்தளவுள்ளன. ஆனுல் இவை மிகவும் நச்சுத் தன்மையானவை,

அனேக நாடுகளில் நடாத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வுகளின்படி புகைத்தல் உடற் சுகாதாரத்திற்கு மிகக்கேட்டை விளைவிக்கக் கூடியதாகவுள்ளது.

---

அரியாலை அரஸ்

# பல்சுவைப் பனை

இரண்டு எழுத்துக்களால் மாத்திரம் ஆகியதே பனை என்ற சொல்லாகும். குறுஞ் சொல்லால் ஆக்கப்பட்டிருப்பதால் அதன் பெருமையைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. பனையின் பெருமையை - குறிப்பாகக் குடாநாட்டு மக்கள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

பாலைவன மக்களுக்குப் பேரீந்து மரம்போல், எமக்குப் பனைமரம் பல்வேறு வகையிலும் உதவி வருகின்றது. பாற்கடலில் உள்ள மீன்கள் பாலின் அருமை பெருமையை உணராததுபோல, நாமும் பனையின் அருமை, பெருமையை உணராமல் இருகின்றேம், காலம் பற்பல மாற்றங்களை நிகழ்த்துவது போல் காலம், ஒருநாள் பனையின் பெருமையை உயர்த்தும்.

பனையின் நிறம் கறுப்புத்தான், அது தரும் கள் வெள்ளையாக இருக்கிறதே! கறுப்பும் வெள்ளையும் எதிர் எதிரான நிறங்கள் அல்லவா, இதைச் சற்றுச் சிந்திக்க ஆக்சரியமாகவல்லவா இருக்கிறது. சற்றுப் பழைய கள் புளிப்பாகத்தான் இருக்கிறது. மொத்தத்தில் பனையே ஒரு புதிரான மரமாக இருக்கிறது.

குறைகுடம் தளம்பும் என்பர். பச்சை ஓலையில் காற்றுப் பட்டால் சத்தம் வராது. இதை நிறைகுடத்துக்கு ஒப்பிடலாம். ''வற்றிய ஓலை கலகலக்கும்'' அதாவது காவோலையிற் காற்றுப் பட்டால் அது சத்தமிடும் என்பது அர்த்தமாகும். காவோலை

(மறுபக்கம் பார்க்க)

வாழ்க்கைக் காலத்தைக் குறைத்தல், சுவாச உறுப்புப் புற்றுநோய், கொடிய இருமல், இதயத்திலும் குருதிக் கலன்களிலும் நோய்கள், வயிற்றில் அல்சர், நாக்கு, தொண்டை, சுவாசக் குழாய், நுரையீரல், பன்கிறியாஸ் போன்றவற்றில் புற்றுநோய் ஆகியன பரிசோதனைகள் மூலம் அறியப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் பல வைத்திய நிபுணர்களால் 20 வருடங்களாக நடத்தப்பட்ட ஆய்வின்படி 25 வயதுக்குட்பட்டவர் சிகரெட் புகைக்கத் தொடங்கி தொடர்ந்து புகைத்தவர்களில் மரணம் அடைந்தவர்களின் தொகை, வாழ்க்கைக் காலம் பூராகவும் புகைக்காது இயற்கை முறையில் இறந்தவர்களின் தொகையிலும் பார்க்க இரு மடங்ாகவுள்ளதென்பதை அறியக்கூடியதாக இருந்தது.

வேறோர் ஆய்வின்படி புகைத்தலை ஒரு பழக்கமாகக் கொண்டுள்ளவர்களின் வாழ்க்கை புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டுக்கும் $5\frac{1}{2}$ நிமிடம் குறைந்துகொண்டே போகின்றது இங்கிலாந்தில் சிகரெட் புகைத்தலால் ஒவ்வொரு வருடமும் 52 வயதுக்கும் 64 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களின் இறக்குந் தொகை 21400 ஆகவும் பெண்களின் தொகை 3756 ஆகவும், சுவாச உறுப்புப் புற்றுநோயால் இறக்குந்தொகை 37000 ஆகவும் அறியப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் தொடர்ந்து புகைக்கும் பழக்கத்தினால் மரணமடையும் மக்களின் தொகை வருட ரீதியாக 36,000 எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் இதயநோயினால் இறப்பதற்கு அடிப்படைக்

---

( 9-ம் தொடர்ச்சி )

யைக் குறைந்த அறிவுள்ளவர்களுக்கு ஒப்பிடலாம்,

பனையிலிருந்து சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட பிரயோசனங்களை அடையலாமென மதிப்பிட்டுள்ளார்கள். கட்டாந்தரையில் யாரும் பயிர் செய்ய முன்வரமாட்டார்கள், ஆனால் பனம் விதைகளைக் கட்டாந்தரையில் போட்டாலும் முளைத்துவிடுகின்றன; இது ஒரு வரப்பிரசாதமாகும். இதையுணர்ந்து நாம் ஒவ்வொருவரும் நமது எதிர்காலச் சந்ததியினரை நினைவில் வைத்து ஆகக் குறைந்தது ஒரு பனம் விதையையாவது நமது வளவுகளில் நட்டுப் பராமரிக்க வேண்டும். நமது பகுதியின் பொருளாதாரத்தின் மூலதனமாகவே பனை விளங்குகின்றது.

சுதேச உற்பத்திப் பொருட்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டிய காலம் அண்மித்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். உங்களால் முடிந்தவரை பனம் பொருட்களை வாங்கி உபயோகியுங்கள். இது உங்களுக்கும் நல்லது, எங்கள் பிரதேசத்திற்கும் நல்லது,

காரணம் மிகக் கூடுதலாகப் புகைத்தலேயாகும். புகைத்தலால் ஏற்படும் கொடிய தீமைகளைப்பற்றி இளைஞர்கள் சிந்திப்பதில்லை. நிறைகுறைதல், ஓர்புது விதமான இருமல் தோன்றிச் சுவாசஉறுப்புக்களைத் தாக்குதல், குடலிலுள்ள சுரப்பிகளைத் தாக்குதல், ஈரல், நுரையீரல் தாக்கப்படுதல் ஆகியன ஏற்படுவதினால் இளைஞர்கள் சுகாதார வாழ்க்கை, சமூக முன்னேற்றம் என்பதை மனதிற்கொண்டு புகைத்தற் பழக்கத்தைப் படிப்படியாக விடுவது சாலவும் சிறந்ததாகும்.

இலங்கையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களில் 12% மானோர் புகைத்தலில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் 55 வீதமானோர் ஒரு முறையாவது புகைக்காதிருக்கின்றரென அறியப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்ற ஆய்வின்படி வாழ்நாளில் புகைக்காத கூடிய அறிவும் அனுபவமும் பெற்ற நேர்மை, கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி, சேவை மனப்பான்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர்களால் பாடசாலைப்பிள்ளைகளின் புகைக்கும் பழக்கத்தைக் கூடியளவு குறைக்கப்பட்டுள்ளது.

கூடிய காற்றோட்டமில்லாத அறை, இருட்டறை, படக்காட்சி நிலையங்கள், பஸ் வண்டிகள், ஆகாயவிமானங்கள், மக்கட் கூட்டமுள்ள இடங்களில் ஒருவர் புகைப்பதினால் புகைக்காதவர்கள் சுகாதார தீமைகளை விளைவிக்கக்கூடிய முறையில் பாதிக்கப்படுகின்றனர். சிறிய குழந்தைகள், வயோதிபர், தாய்மார்கள், நோயாளிகள் போன்ற அநேகர் புகைக்கின்றவர் வெளிவிடும் புகையைச் சுவாசித்து இப்படியான இடங்களில் தாக்கப்படுவதை அவர்கள் உணருவதில்லை.

புகைத்தலையும் மது அருந்துதலையும் குறைப்பதற்கு அல்லது முற்றாக ஒழிப்பதற்குக் கையாள வேண்டிய முறைகள்:-

1. பெற்றோரும் ஆசிரியர்களும் பாடசாலைப்பிள்ளைகள் மத்தியில் புகைக்காதிருத்தல்.
2. அதிகாரிகள், தொழில் புரிபவர்கள், கடமையிலீடுபட்டிருக்கும் வேளையில் புகைக்காதிருத்தல்.
3. தொலைக்காட்சி, வானொலி மூலம் விளம்பரஞ் செய்வதைத் தடைசெய்தல்.
4. பகிரங்க இடங்களில் புகைத்தலைத் தடைசெய்தல்.
5. பஸ்வண்டிகளில் புகைத்தல் சட்டத்துக்குவிரோதமானது என்பதை வலியுறுத்துதல்.
6. வைத்திய நிபுணர்கள் பாடசாலைகள்பூராகப்புகைத்தால் ஏற்படும் தீமைகள், நோய்கள், அபாயங்கள் ஆகியவற்றை விளக்குதல்.

# அந்த ஒரு நாள்!

-சி. ச பாரத்

கடமையை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கும் கனவானைப்போல தனது கடமையை முடித்துவிட்ட பூரிப்புடன் கதிரவன் கீழ்த்திசை வானை அடைந்து கொண்டிருந்தான்.

அதேவேளையில் இருட்தேவன் தன் போர்வைக்குள் உலகை மூடி மறைத்துத்தனதுதிருவிளையாடல் களைப் புரியப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்திராவும் இருளோடு இருளாக எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளின் இதயத்திலிருந்து ஏகப்பட்ட பெருமூச்சுக்கள் ஒரேசமயத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. அவள்கண்களில் எதிர்காலத்தின் ஏமாற்றம் மிகவும் பயங்கரமாகக் காணப்பட்டது.

இதே கோலத்தில் அவளை யாராவது கண்டால், பேயோ,



பசாசோவென எண்ணிப் பயந்து ஓடிவிடுவார்கள். இதை முன் கூட்டியே அறிந்திருந்த இந்திரா இதேநேரத்தைத் தேர்ந்தெடுத்ததையிட்டு தன்னுள் சந்தோசப்பட்டாள். யாரைக் கண்டு அவள் பயந்து ஓடிக்கொண்டிருந்தாளோ தெரியவில்லை. அவளின் ஓட்டம் இடைவிடாது தொடர்ந்து கொண்டிருந்தது. இதுதான் அவளின் கடைசி ஓட்டம். இதைத் தடைசெய்ய யாராலும் முடியாது. அப்படித் தடைசெய்து நிறுத்தக்கூடியவர்களே அவளை ஓடும்படி விரட்டும்போது வேறு யார் அவளைத் தடை செய்யமுடியும்? யாருக்காக அவள் வாழ்ந்தாளோ, அவனே அவளை ஓடும்படி விரட்டிவிட்டபோது அவளால் வேறு என்னதான் செய்ய முடியும்?

வரவர அவளின் ஓட்டம் வேகமாகிக்கொண்டே வந்தது. ஒரு கையில் குழந்தையும், மறு கையில் சேலையின் தலைப்பையும் பிடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தாள். எவ்வளவு நேரந்தான் இந்த ஓட்டம்? இன்னும் சிறிதுநேரத்தில் அவளின் ஓட்டம் நின்றுவிடும். ஆனல் அதற்கிடையில்......... யாரும் தடைசெய்தால்......... முடியாது. முடியவே முடியாது. அந்த நேரத்தில் அங்கு யார்தான் வரப்போகிருர்கள்? தாயின் செய்கையினை அறிந்த சேய், தாயின் சேலைத் தலைப்பை இழுத்து இழுத்துப் பார்த்தது. அழுது அழுது பார்த்தது. பயனில்லை. இதை அறிந்த சேய், தாயின் அணைப்பில் இறுக்கிக்கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் இந்திரா நினைப்பது நடந்துவிடும். அப்புறம் இந்திரா என்று அவளை யாருமே அழைக்க முடியாது. அவளை அழைக்க வேண்டியவன் குமார் மட்டும்தான். ஆனல் அவன்தான் அவளை அடித்துத் துரத்திவிட்

---

## தங்கம்

உலகின் தங்க உற்பத்தியின் மொத்த அளவில் 3/1பங்கு தென்னுபிரிக்காவில் உற்பத்தியாகின்றது. 1988-ல் உலகில் உற்பத்தியான தங்கத்தின் மொத்த உற்பத்தியில் அரைவாசிப் பங்கு பெண்களின் ஆபரணங்களாகிவிட்டதாம். கடந்தஆண்டில் உற்பத்தியான தங்க உற்பத்தி; 1775 தொன் ஆகும்.

இதில் பல் உற்பத்திக்கும் பல் அடைப்பதற்கும் 45 தொன் செலவாகியுள்ளது. தங்க நாணய உற்பத்திக்கு 120 தொன் தங்கம் தங்கப்பாளத் (தங்க பிஸ்கற் கட்டிகள்)திற்கு 565 தொன் தங்கம். எலெக்ரோனிக் தொழிலுக்கு 130 தொன் தங்கம். பிற தொழில்களுக்கு 70 தொன் தங்கம். மிகுதி தங்கம் பெண்களின் ஆசை தீர்க்கும் ஆபரணங்களாக மாறிவிட்டன.

---

டாளே! அதன்பின் அவளை அவன் எப்படி அழைக்க முடியும். அவன் ஏன் அவளை அழைக்கப்போகிறுன்? அவ்வளவு மோசமான செய்கையை அல்லவா அவள் செய்துவிட்டாள்.

குமாரின் மனத்திரையின் கண் பல காட்சிகள் மின்னி மறைந்து கொண்டிருந்தன. சற்று நேரத்துக்கு முன் அவன் முன்னிலையில் நடந்த சம்பவம், அவன் மனதை விட்டு அகல மறுத்தது. அவன் உதடுகள் மட்டும் வேசி, தாசி என எதை எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அவன் கண்கள் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன. "இந்திரா, இந்திரா...... என அவன் பற்கள் நறுநறுத்தன.

இந்திரா: நீ இப்படிப்பட்டவள் என்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்? இப்படிச் செய்வாள் என்று அவன் கடைசிவரையும் எதிர்பார்க்கவேயில்லை. எத்தனை வருடங்களானுலும், உனக்காகக் காத்திருப்பேன் என்று கூறிய அதே இந்திரா இன்று...... ஒரு குழந்தைக்குத் தாய். இதை நினைக்கும்போது அவன் நெஞ்சம் சுக்கு நூருக வெடித்துச் சிதறியது. எத்தனை நாட்கள் கடற்கரையிலும், பூந்தோட்டங்களிலும் இன்பமாகப் பொழுதைப் போக்கியிருப்பான் குமார். அப்போதெல்லாம் ''வாழ்ந்தால் உங்களுடன்தான் வாழ்வேன், இல்லையேல் மண்ணோடு மண்ணுகச் செத்து மடிவேன்.'' என்று கூறிய அதே இந்திரா இன்று இருக்கும் நிலை?

இராணுவ முகாமிலிருந்து வரும்போது அவன் அவளுக்காகக் கொண்டு வந்த பண்டங்கள் யாவும் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக்கொண்டிருந்தன. இந்திராவின் திருமணத்துக்காகக் கொண்டுவந்த பொருட்கள் யாவும் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. குமார் எப்போதோ இந்திராவைத் திருமணம் செய்திருப்பான். ஆனுல்........ மூன்றுவருடங்களுக்குள் இந்திராவைத் திருமணம் செய்யக்கூடாது என இராணுவச் சட்டம் தடை செய்துவிட்டது. 3 வருடங்களும் 3 நாட்களாகப் பறந்தோடிய பின் மறுபடியும் திருமணம் செய்ய வந்தான். திருமண ஏற்பாடுகள் யாவும் மிக விமரிசையாக நடைபெற்றன. நாளை விடிந்தால் திருமணம். அப்புறம் அவனை யாரும் தடை செய்ய முடியாது. ஆனுல் அதற்கிடையில்.........

''அந்நிய துருப்புக்கள் உள்நாட்டில் நுழைந்துவிட்டன.
உடனே புறப்பட்டு வரவும்''
இப்படிக்கு,
உயர் இராணுவ அதிகாரி.

என்னும் வாசகங்களை தாங்கி வந்த தந்தி அத்திருமணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இரண்டாம் முறையும் தோல்விதான். இப்போது மூன்ரும் முறையாக ஆவலுடன் ஓடி வந்தான் குமார். ஆனுல்........... அவன்

கண்ட காட்சி இப்போதும் அவன் மனதைவிட்டு அகலவில்லை. இந்த முறையும் அவன் திருமணம் நடைபெறமாட்டாது. இனி அவனுக்குத் திருமணமே நடக்காது.

கன்னிப் பெண்ணை மணந்து கனிவான வாழ்க்கையை நடத்த வேண்டிய குமார், இன்று கன்னித்தன்மையை இழந்த காரிகையை அல்லவா திருமணம் செய்ய வேண்டியுள்ளது. இதை அவன் மனம் ஏற்றுக்கொள்ளுமா! அவன் மனம்தான் ஏற்றுக்கொண்டாலும் இப்பாழும் உலகந்தான் ஏற்றுக்கொள்ளுமா? இப்பாழும் உலகம் ஏற்றுக் கொள்ளாதபடி பாழ்தானே இந்திராவும் அப்பாழ் மண்டபத்தைத் தேர்ந்தெடுத்து தன் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டாள்.

எவருமே கிட்ட நெருங்கப் பயப்படும் அப்பாழடைந்த மண்டபத்தின் முன் நினைத்துப் பார்க்க முடியாத அளவு சனக்கூட்டம் நிறைந்திருந்தது. அதன் காரணம் இந்திரா அங்கே தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துவிட்டாள் என்ற செய்திதான். இச்செய்தியை அறிந்த குமாரின் நெஞ்சம் பதைபதைத்தது. அவன் கால்கள் அவனை அறியாமல் அப்பாழடைந்த மண்டபத்தை நோக்கி நடைபோட்டன. அவன் கண்கள் அம்மண்டபத்தை ஊடுருவி நோக்கியது. அப்போது அன்றொருநாள் நடந்த ஓர் பழைய நிகழ்ச்சி தோன்றி மறைந்தது.

அன்று வெள்ளிக்கிழமை......
இந்திராவும், குமாரும் முருகன் கோயிலுக்குச் சென்று தங்கள் திருமணம் இனிது நடைபெற வேண்டுமென முருகனைத் தரிசித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தனர்.

வானம் இருண்டது, மேகம் கறுத்தது. மழை வரும்போலத் தோன்றியது. மின்னல் பளிர் பளிர் எனத் தோன்றிப் பயமுறுத்திக்கொண்டிருந்தது. குமார் எனக்கு ஒரே பயமாக இருக்கி

---

## கண்கள்

மக்களாகப் பிறந்து வாழும் எமக்கெல்லாம் பார்வை தரும் கண்கள் இரண்டே இரண்டுதான்!

ஆனால் கற்றறிந்தோர்க்கு இந்த இரு கண்களோடு அறிவு என்னும் கண்ணும் சேர்ந்து மூன்று கண்களாம்.

வள்ளல்களுக்கு வாரிவழங்கும் கையிலுள்ள விரல் நகக்கண்கள் ஐந்தும் இருகண்களும் சேர்ந்து மொத்தம் ஏழு கண்களாம்.

மெய்ப்பொருள் உணர்ந்த ஞானிகளுக்கோ கணக்கற்ற கண்களாம்.

இவ்வாறு கண்களின் தொகை பற்றி விளக்கிக் கூறுகின்றது 'நீதி வெண்பா' என்னும் செய்யுள்.

றது, என்று அன்புடன் கூறிக் கொண்டாள் இந்திரா. அவளின் பயத்தை மேலும் அதிகரிக்கும் வண்ணம் 'சோ' என்ற இரைச்சலுடன் மழை பொழிய ஆரம்பித்தது. அப்படியே இந்திராவையும் அழைத்துக்கொண்டு அருகில் இருந்த பாழடைந்த மண்டபத்துக்குள் நுழைந்தான் குமார். அச்சத்தின் மிகுதியால் குமாரை இறுக அணைத்துக் கொண்டாள் இந்திரா. அச்செயல் குமாரின் மனதில் பல சஞ்சலங்களை ஏற்படுத்திவிட்டது. குமாரின் மனத்தில் காதல் போதை தலைக்கேறி விட்டது. ஒரு தரம் இந்திராவை உற்று நோக்கினன். அவள் நாணத்தினல் முகத்தைக் கவிழ்ந்துக் கொண்டாள்.

கவிழ்ந்துவிட்ட முகத்தை கையிலேந்திய குமார் இந்திரா... என அழைத்தான். அவள் பதில் பேசவில்லை. இந்திரா.........

ம்.........

இந்திரா.........

ம்.........

இன்று நல்லநாள் இல்லையா?

ஏன் வெள்ளிக்கிழமை என்றபடியாவா?

உஹூம்......

அப்போ.........?

அப்போ......... அவன் பேச்சுத் தடைப்பட்டது.

அவன் கரங்களால் இந்திராவை இறுக அணைத்து, முத்தமிட்டான். அவன் பிடிக்குள் அவள் சிக்கிக் கொண்டாள்.

சீ......... எடுங்கள் கையை.

இன்னமும் திருமணம் ஆகவில்லை......... அதற்குள்.........?

அதற்குள் என்ன இந்திரா நமது திருமணம்தான் நிச்சயிக்கப்பட்டுவிட்டதே. அவன் முரட்டுக்கரங்கள் அவளின் இடையைச் சுற்றி வளைத்துக்கொண்டன.

குமார் இதையெல்லாம் அப்புறம் வைத்துக்கொள்ளுங்கள். கிணற்று வெள்ளத்தை ஆறுவந்து கொண்டு போகப்போகிறதா?

இந்திராவின் சொற்கள் யாவும் புறக்குடத்தில் வார்த்த நீராயின. கடைசியில் குமாரின் எண்ணம் நிறைவேறியது.

அப்புறம் இந்திராவையும் அழைத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான் குமார், அடுத்த நாள் விடிந்தால் திருமணம்! அவனுக்கு எந்தவிதமான சிக்கலோ, வெட்கமோ, பயமோ இல்லாமல் இந்திராவைத் தன் அன்புப் பிடிக்குள் அணைத்துக்கொண்டு வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்து விடுவான் குமார். ஆனல் அதற்குள்.........

''உடனே போருக்குப் புறப்பட்டு வரவும்'' என்னும் வாசகங்களைக்கொண்ட உயர் அதிகாரியின் தந்தி அத்தருணத்துக்கு முற்றுப்புள்ளியை வைத்துவிட்டது. அப்போது போருக்குப் புறப்பட்ட குமார் இப்போது 3 வருடங்க

ளின் பின்தான் ஊருக்கு வந்திருக்கிறன்.

இந்நிகழ்ச்சி யாவும் அவன் மனக் கண்முன் மின்னி மறைந்தன. இப்போது குமாருக்கு யாவும் விளங்கிவிட்டன. பழைய ஞாபகங்கள் நினைவுக்கு வரத் தொடங்கின.

அந்த நாள்......... அன்று வெள்ளிக்கிழமை நடந்த சம்பவங்களும் நினைவுக்கு வரத்தொடங்கிவிட்டன. அடுத்த கணம்......... தலை தெறிக்கும் வேகத்தில் பாழடைந்த மண்டபத்துக்குள் விரைந்தான். ஆனல் கண்ட காட்சி...... இந்திரா கயிற்றில் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளருகே அவளின் குழந்தை, இல்லை இல்லை அவனின் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. அதன் கையில் ஒரு சிறுதுண்டுக் காகிதம் காணப்பட்டது. காகிதத்தைத் திறந்தான் குமார்......... அதில் கீழ்க் கண்ட வாசகங்கள் காணப்பட்டன.

அன்பின் குமார்!

அன்று நீங்கள் என்னை இதே இடத்தில் உங்கள்முரட்டுப் பிடிக்குள் சிக்க வைத்தீர்கள். ஆனல் இன்று நான் உங்கள் பிடியைத் தள்ளிவிட்டு மேலே போய்க் கொண்டிருக்கிறேன். எனக்கு நேர்ந்த கதியைப்போல் உங்கள் குழந்தைக்கு நேர்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். எனது மணமேடையையும் பிணமேடையையும் ஒரே இடத்தில் அமைத்துத் தந்த உங்களுக்கு என் நன்றி.

இப்படிக்கு,

உங்கள் மனைவி என்று சொல்லமுடியாத துர்ப்பக்கியசாலி இந்திரா.

கடிதத்தைப் படித்த குமாரின் கண்கள் கண்ணீரால் நனைந்தன. அவன் கைகள் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டன.

(யாவும் கற்பனையே)


எமது நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

* சஞ்சிகைகள்.........
* புத்தகங்கள்.........
* மற்றும் பிரசுரங்கள்.........

யாவுக்கும் → உமா பிறிண்டேர்ஸ்

32, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர் – யாழ்ப்பாணம்.

# சங்கச் செய்திகள்

## 'இன்றைய நிலையில் பருத்தித்துறை சங்கம் ஒரு வழிகாட்டி'

### தலைவர் திரு. இ. சிவப்பிரகாசத்தின் சிறப்புமிகு சேவைக்கு சமாசத் தலைவர் திரு. தி. அமிர்தநாதன் பாராட்டு

22-10-89-ல் பருத்தித்துறை தெ. ப. பொ. கூ. சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சங்கங்களின் சமாசத்தலைவர் திரு. தி. அமிர்தநாதன் அவர்கள் மேற்படி சங்கத் தலைவருக்கு புகழாரம் சூட்டினர்.

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த மேற்படி கூட்டத்தில் சமாசத் தலைவர் திரு. அமிர்தநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது;

எமது சகோதர சங்கங்கள் பலவற்றின் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு அங்கெல்லாம் பார்த்தும் கேட்டும் கொண்ட அநுபவத்திலிருந்து பருத்தித்துறை சங்கத்தின் தலைமைத்துவ ஆளுமைச்சிறப்பைஇப் பொதுச் சபையின் அமைதியினூடே காண்கின்றேன். அதற்காக தலைவர் திரு. சிவப்பிரகாசம் அவர்களை மனமார நான் பாராட்டுகிறேன். பல சங்கங்களின் அங்கத்தவர்களின்நிலை சகல துறைகளிலும் ஆரம்ப நிலையிலேயே இருப்பதைக் காணமுடிகிறது.

சமாச்த்தை வலுவுள்ள ஒரு ஸ்தாபனமாகவும்அதேநேரத்தில் சேவை நிலையமாகவும் கட்டி எழுப்பும் பொறுப்பு சங்கங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. விரைவில்கிராமியவங்கியை ஆரம்பித்து நடைமுறைப்படுத்த சங்கங்களின் பருத்தித்துறை சங்கம் நாட்டின் இக்காலகட்ட நெருக்கடியிலும் இரண்டாம் தடவைக் கொடுப்பனவாக இப்பெருந் தொகையான ரூபா 3,25000ஐ அங்கத்தவருக்குக் கொடுகிறதென்றல் அது பருத்தித்துறை சங்கத்தின் தலைவர் திரு. சிவப்பிரகாசம் அவர்களின் தன்னிகரில்லா சிறந்த வழிகாட்டலினலே என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்றும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும் திரு. சிவப்பிரகாசம் அவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி அங்கத்தவர்களின் மனச் சோர்வை அகற்ற முன்வரல் வேண்டும்.

கங்கள். ஒத்துழைப்புத்தர வேண்டும். எமது உற்பத்திகளையும் இலாபங்களையும் வெவ்வேறு துறையினர் அனுபவிப்பதையும் எமது உழைப்பின் பயனை வைத்து விலாசம் பெறுவதையும் அனுமதிக்க முடியாது. அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு கல்வி பொருளாதாரரீதியில் வழிகாட்டி அவர்களை முன்னேற்றி சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவு செய்ய வேண்டும்.

சங்கத்தலைவர் திரு. கி. சிவப்பிரகாசம்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அவர் தனது தலைமை உரையில் கூறியதாவது.

நெருக்கடி மிக்க இக்கால கட்டத்திலும் இப் பெருந்தொகை பணத்தை அங்கத்தவர்களுக்கு கொடுக்க முடிந்ததென்றால் அதற்கு நாம் முன்னுள் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. வேலாயுதம்பிள்ளையின் வழிகாட்டலே ஆகும். அகற்றுங்கள்ளை மதுசாரமாக்கும் முறைக்கு வழிவகுத்ததாலேயே இன்றும் இச் சங்கங்கள் தப்பிப் பிழைத்திருக்கின்றன. எமது முன்னுள் உதவி ஆணையாளருக்கு என்றும் நன்றிக் கடனுள்ளவர்களாவோம். இதே போன்ற சில புதிய உத்தி முறைகளை எமது புதிய உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் அவர்களும் கையாண்டு செயல் படுவாரென்ற நம்பிக்கை எமக்குண்டு.

சமாசத்தலைவர் திரு. அமிர்தநாதன் தகுதியும், ஆற்றலும் அனுபவமிக்க ஒரு சிறந்த தலைமைத்துவப் பண்புகள் கொண்டவர். சமூக சேவையை விசுவாசிப்பவர். எமது சமூகத்திற்காக அளப்பரிய சேவை செய்துள்ளதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

**பருத்தித்துறை சங்கம் 2-ம் தட்வைப்பணமாக ரூபா 3, 25000/- வழங்கியது திரு. செல்வகிருஷ்ணனுக்கு முதல் இடம்.**

பருத்தித்துறை சங்க அங்கத்தவர் திரு. பொ. செல்வகிருஷ்ணன் 6 மாத கால கள் கொடுப்பனவின் அதி உச்சமாக 18,232/- ரூபாவை இரண்டாந் தட்வைப் பணமாகப் பெற்று சாதனையை நிலை நாட்டி உள்ளனர்.

மொத்தம் 3, 25000/- ரூபாவை பருத்தித்துறை சங்கம் தீபாவளியை முன்னிட்டு வழங்கியது.

இதில் ஆகக் கூடிய தொகையை திரு. பொ. செல்வகிருஷ்ணன் என்ற அங்கத்தவர் பெற்ருர். அவர் பெற்றது ரூபா 18, 432/- முதலாம் இடத்தைப் பெற்ற சிறந்ததொழிலாளி என்ற சாதனையை நிலைநாட்டி பலரின் பாராட்டையும் பெற்ருர்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

### அச்சுவேலி சங்க தலைமைத்துவ ஆளுமைக்கு உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் புகழாரம்

அச்சுவேலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும், நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் 21-10.89 சனிக்கிழமை நடை பெற்றது.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் அவர்கள் மேற்படி சங்க முகாமைத்துவக் கட்டுக் கோப்பையும், தலைமைத்துவ ஆளுமைச் சிறப்பையும் வெகுவாகப் பாராட்டிப் பேசியதுடன், குறிப்பாக சங்கத் தலைவர் திரு. பொ. சுந்தரம் அவர்களின் தலைமைத்துவத்தைப் பெற்று இயங்கிய காலம் அச்சுவேலி சங்கத்தின் வரலாற்றில் ஓர்பொற்காலமென்றே குறிப்பிட வேண்டும் என்றும் உதவி ஆணையாளர் அவர்கள் குறிப்பிட்டது அங்கத்தவர் பலரின் நெஞ்சைத் தொடும் விதத்தில் அமைந்திருந்தது.

நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவின்போது புதிய தலைவராக திரு. பொ. அழகரத்தினமும், உபதலைவராக திரு. ச. பொன்னுத்துரையும், செயலாளராக திரு. க. ஆறுமுகமும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் விபரம் பின்வருமாறு: திருவாளர்கள், கோ. கந்தசாமி, ச. கிருஷ்ணரவி, கி. நவரத்தினம், ப. ஆனந்தம், ச. சின்னத்துரை, மு. தவசி.

### அரியாலை சங்க

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 19-10-89-ல் சங்க காரியாலயத்தில் மிக அமைதியான முறையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்டுச் சிறந்த முறையில் சங்கத்தை வழி நடத்திச் சென்ற நிர்வாகத்தை பாராட்டியதுடன் மீண்டும் அதே நிர்வாக சபையை (திரு. தவராசா தலைமையிலான ஏகமனதாகவும் பொதுச் சபை தெரிவு செய்தது.

# 'பென்சில்' எப்படி உருவாகிறது!

— சிவயோகமலர் ஜெயக்குமார் —

சிறுவர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்தும் பென்சிலின் வரலாறு மிகநீண்டது. எனவே பென்சிலை ஜாக்கிரதையாகச் சீவி மிக அவதானமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

சைபீரியாவிலுள்ள சிதார் இனத்தைச் சேர்ந்த பைன்மரங்களே பென்சில் செய்வதற்குப் பயன்படுகிறது. இம்மரத்தின் கட்டைஎடைகுறைவானதாகவும் வலுவுள்ளதாகவும்இருப்பதாலும் இதை வெட்டுவதும் சமதளப் படுத்துவதும் எளிதாக இருப்பதாலும் பென்சில் செய்வதற்கு இம்மரக்கட்டையைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

எழுதுவதற்குப் பயன்படும் காரீயமும் சைபீரியாவிலேயே கிடைக்கிறது.சைபீரியாவிலுள்ள போத்தோக்கோல்என்றபகுதியில் பூமிக்கு அடியில் பளபளப்பான மிருதுவான காரீயம் ஏராளமாக உள்ளது.

மொஸ்கோவிலிலே பெரிய பென்சில்தொழிற்சாலை உள்ளது. சைபீரியாவிலிருந்து பைன்மரக் கட்டைகளையும் காரீயம் போன்றவற்றையும் ரயில்கள் மொஸ்கோ பென்சில் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லும்.

பென்சில் செய்வதற்கு ஒரு வித சிறந்த களிமண் தேவைப்படுகிறது. களிமண் பென்சில் காரீயத்தை வலுவுள்ளதாக்கப் பயன்படுகிறது. இந்தக் களிமண் உக்ரேய்னுவில் கிடைக்கின்றது.

இவைதவிர பென்சில் செய்வதற்குப் பசை, கொழுப்பு, சாயப் பொருட்கள், அலுமீனியம் போன்றனவும் தேவைப்படுகின்றன. காரீயத்தூள்களை ஒன்றாக இணைப்பதற்குப் பசை தேவைப்படுகின்றது. இந்தக் காரீயம் எழுதும்போது தாளின் மீது எளிதாகப் படிவதற்குக் கொழுப்புத் தேவைப்படுகின்றது. பென்சிலுக்கு வண்ணம் தீட்டச் சாயப் பொருள் பயன்படுகின்றது. பென்சிலின் மேல் எழுத்துக் களைப் பொறிக்க அலுமீனியம் தேவைபடுகின்றது.

பென்சில் தொழிற்சாலையில் பல அற்புதமானஇயந்திரங்களைக் காணமுடியும். நாளொன்றுக்கு முப்பது லட்சம் பென்சில்கள் இந்தத் தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. இயந்திரங்கள்

வெகுவேகமாகத் தொழிற்படுகின்றன. உலகம் முழுவதுமுள்ள சிறுவர்களுக்குத் தேவையான அத்தனை பென்சில்களும் இங்கேதான் செய்யப்படுகின்றன.

தொழிற்சாலையின் ஒரு பகுதியில் பெரிய இயந்திரங்கள் காரீயத்தையும் களிமண்ணையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்குகின்றன மறுபகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட பென்சில்களை இயந்திரங்கள் பெட்டிகளில் அடுக்குகின்றன

களிமண்ணும் காரீயமும் முதலில் தூளாக மாற்றப்படுகின்றன. களிமண்ணும் காரீயமும் நன்கு அரைக்கப்படும். பின்பு அத்துடன் பசை சேர்க்கப்படும். பின் மறுபடியும் தூள்களாக்கப்படும் இத்தூள்களுக்கிடையே காற்றுக்குமிழிகளும் அழுக்குப் பொருட்களும் இருக்கின்றன. இவை நீக்கப்படாவிட்டால் பென்சிற் கூர் அடிக்கடி உடையும். இக் காற்றுக்குமிழியை நீக்க இயந்திரத்தின் உதவியுடன் காரீயத் தூளை அழுத்தத்துக்கு உட்படுத்துகிறார்கள். இவ்வியந்திரம் காரீயத் தூள்களைக் கரிய உருளைகளாக வெளியே தள்ளும். அழுக்குகளை நீக்க இந்தக் காரீய உருளைகள் துணி ஒன்றின் மூலம் செலுத்தப்படுகின்றன.

அழுக்குப் பின் தங்குகின்றது அழுக்கற்ற காரீயத் துகள்கள் துணியிலிருந்து சிறிய இழைகளாக வெளிவருகின்றன. இவை அழுக்கோ காற்றுக்குமிழியோ அற்ற பென்சில் செய்யப் பயன்படக்கூடிய காரீயக்குச்சியாக மாற்றப்படும்.

இக்குச்சிகள் வலுவுள்ளதாக மாற்றுவதற்காக உலையொன்றிலிட்டுச் சுட்டு உலர்த்துகிறார்கள். உலர்ந்த குச்சிகளை நன்கு எழுதுவதற்காகக் கொழுப்பில் ஊற வைக்கவேண்டும்.

பைன் மரத்துண்டுகள் பல மாறுதலுக்கு உட்படுகின்றன. மிக விரைவாக இயங்கும் இயந்திரங்கள் அவற்றைச் சம அளவுள்ள சிறுபலகைகளாக வெட்டுகின்றன. ஒவ்வொரு பலகையிலும் பள்ளங்கள் உள்ளன. அவற்றுக்கிடையே காரீயக்குச்சிகள் வைக்கப்படுகின்றன.

அதன்பின் அதேயளவு பள்ளம் உள்ள பலகையை எடுத்துக் காரீயக் குச்சியின் மேல்மூடி ஒட்டப்படுகின்றது. ஆறு பென்சில்கள் ஒரேபலகையில் போடப்பட்டுப் பின் தனித் தனியாக வெட்டப்படுகின்றன. ஒவ்வொரு பென்சிலின் நடுவிலும் காரீயம் உள்ளது

பென்சில் கவர்ச்சிகரமாக இருப்பதற்கு வார்னிஷ்பூச வேறு இயந்திரங்களுக்கு அனுப்பப்படுகின்றது. அங்கு இதில் காகிதம் போன்று மெல்லிய அலுமீனிய ரேக்கு சுற்றப்படுகிறது. அதன்மீது முத்திரையும் அடையாளக்குறியும் பொறிக்கப்படும்.

இதுவே பென்சிலாகச் சிறுவர் கையில் உலாவுகின்றது. இத்தனை கஷ்டமான வரலாற்றை உடைய பென்சிலைக் கவனமாகப் பாதுகாப்பது சிறுவராகிய உங்கள் கடமை அல்லவா.

தொடர் · நவீனம்

# உண்மையில்லாத உறவுகள்

அத்தியாயம் → 10

கே. வி. என்.

கேட்டியோ அல்லி! காலம் எவ்வளவு வேகமாகப் போயிட்டுது. அது போனவேகம் எனக்குத் தெரியவில்லைத்தான். சும்மா ஒரு தொழில்துறை சோலி இல்லாமல் சோம்பி வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தாலல்லவா காலத்தையும்நேரத்தையும்எண்ணிக்கலங்கி இருக்க முடியும். ஆனல் காலம் தான் தன்னைப்பற்றி நினைவூட்ட என்னைத் தேடித் திரிஞ்சிருக்க வேண்டும். காலமை எழும்பி நிலம் பலார்பத்தி விடியமுந்தி அதாவது கருக்கலோடை வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டனெண்டால் பேந்தும் ஊர் உறங்கிய பின்னே அல்லது அடுத்த நாளோ அதுவுமில்லையெண்டால் ஆறேழு நாட்களுக்குப் பிறகுகூட வருவன். ஆனல் ஏதோ சித்தன் போக்கு சிவன் போக்காகத் திரிஞ்சனென்றும் நினைச்சிடாதை அல்லி.எல்லாம் காரியத்தோடையும், தொழிலோடையும்தான். அதனலே காலத்தைப்பற்றி கணக்கிட எனக்கு எங்கே நேரம் கிடைச்சது? ஆனல் காலம் அன்னத்தைக் கூப்பிட்டுக் கால இடைவெளியை, கடந்து வந்த தூரத்தை அவளில் பதிந்து வைத்து மூப்பின் முத்திரையைக் குத்திவைத்து விட்டது. என்னெண்டு கேட்கிறியோ? அன்னத்துக்குத் தலைவெள்ளைப் பஞ்சு மேகக் கணக்காக தலை நரைச்சு, தள்ளாமையும் சாடையாகவந்த மாதிரி அவன் சொன்ன சங்கதிக்குப் பிறகுதான் எனக்குத் தெரிஞ்சிது. காலத்தின் போக்கையும் அதனல் ஏற்பட்ட புதிய விளைவுகளையும் என்னல் எண்ணிப்பார்க்க முடிஞ்சிது, அன்னம் சொன்னுள்;

''என்னப்பா பிள்ளையை இன்னும் இப்பிடியே வீட்டுக்குள்ளை வைச்சுக்கொண்டு......... அவள் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்க சொல்லுறியளோ? அவளோட்டை பெட்டையள் குடியும் குடித்தனமுமாகி விட்டுதுகள்.''

''என்னெண்டாய்? எல்லுப் போலை விளக்கமாகச் சொல்லன் அன்னம்.''

''இல்லை, பால் பருக்க சூப்பி வாங்கிவரச் சொல்லுறன் எண்டு பார்த்தியளோ? ஒரு அப்பன் கேட்கிற கேள்வியோ இது? இல்லை ஒரு குமரை வைச்சுக் கொண்டு நீங்கள் இளந்தாரித் தத்துவந்

துக்கு விளையாடிக்கொண்டு திரியுங்கோவன். குமரும் நெருப்பும் ஒருமாதிரித்தான். அது எங்களுக்குத்தான் தெரியும்.''

''என்ன அனனம்! பேய்க்கதையெல்லாம் பேசுறுய்? முந்தநாள் பிறந்த பெட்டைக்கு இப்ப என்ன வந்திட்டுதெண்டு கேட்கிறன்?''

''முந்தநாளோ? எட அறுதல் மனுசா! நீங்கள் இந்த லோகத்திலேதான் இருக்கிறியளோ? அல்லது வேறை எங்கையாவது லோகத்திலே இருக்கிறியளோ? நல்லவேளை, என்னைப் போன வரியம்தான் கலியாணம் முடிச்சனுன் எண்டு சொல்லாமல்விட்டியளே அது பெரிய காரியம்தான். வாற ஆவணி முடிய பத்தொன்பது வயது, துடங்குது, குஞ்சரத்துக்கு.''

"என்னடி புதினமாக்கிடக்கு, பத்தொன்பது வயது துடங்கப் போகுதா?''

''உழைப்பு......உழைப்பு...... உதுதான் உங்கங்கடை முழுத்தியானமும். பின்னை வீட்டிலே ஒரு குமர் இருந்து கொட்டாவி விடுகிதே எண்ட எண்ணம் சிறிதேனும் மருந்துக்கும் உங்களட்டைக் கிடையாது.''

''என்ன அன்னம்!குமர் கொட்டாவி, அது இதெண்டெல்லாம் கிழட்டுக்கதை கதைத்துக்கொண்டிருக்கிறுய். அதிலேயும் எல்லா இடங்களிலேயும் ஆம்பிளையள் அறக்கப்பறக்க ஓடி உழைக்கவில்லை யெண்டுதான் பெண்டில், பிள்ளையள் கவலைப்பட்டு புறுபுறுக்குங்கள். நீ என்னடாவெண்டால் என்ர உழைப்புக் கூடிப்

## பகைவனுக்கு அருள்வாய்

அயலவனுக்கு அன்பு: பகைவனுக்கு வெறுப்பு என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானே உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறுர். நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறுர்.

உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்புசெய்தால் உங்களுக்கு என்ன கைமாறு கிடைக்கும்? ஆயக்காரரும் இவ்வாறே செய்வதில்லை

யேசு பெருமான்
(மலைப் பொழிவு)

---

போச்செண்ஞெ குறைப்பட்டுக் கொள்ளுறுய்!

''உன்ருணை இது ஒரு ஊர் உலகத்திலே இல்லாத புதினம் தான். ஏதோ ஒரு பெட்டையைப் பெத்துப்போட்டு பெரிசாகக் கொக்கரிக்கிறுய்? ஆறேழு

பெடிபெட்டை இருந்து அதுகள் கைகால் வழிய இடறுப்பட்டுக் கொண்டிருந்துகொண்டால் இது இவ்வளவு பெரிசாகத் தெரியாது கண்டியோ! குஞ்சரம் ஒன்டே ஒண்டாக இருக்கிறதாலேதான் விடிஞ்சால் பொழுதுபட்டால் உனக்கு அவளின்ர நினைவொண்டுதான் பெரிசாகப்போய்விட்டுது. உந்த விசர் யோசனையாலேதான் உன்ர தலையும் நரைச்சு, அறளையும் பேந்திட்டுது. இஞ்சை என்னைப் பார், ஒருக்கா நிமிர்ந்து பாரனப்பா. ஒரு மயிராவது நரைச்சுக் கிரைச்சுக் கிடக்கோ வெண்டு. மயிரைப் புடுங்க வேணும் கண்டியோ, அண்டைக்குப் பார்த்தமாதிரி...... பதினறு வயது மார்க்கண்டேயன்மாதிரி, உன்னைக் கலியாணம் கட்டையுக்கை இருந்தமாதிரித்தானே இப்பவும் இருக்கிறன். இல்லையெண்டமாலுக்கு இன்னுமொரு சுற்றுப் பெருத்திருக்கிறேன்.''

''நீங்கள் மூப்பிளமை இல்லாமல் என்றும் பதினறு வயது மார்க்கண்டரேயாக இருங்கோ அதாலே நான் ஒண்டும் பொருமைப்படவில்லை. ஆனல் குஞ்சரத்தின்ரை அலுவலை ஒருமாதிரியாக ஒப்பேத்திப்போட்டு எப்பிடி வேணுமெண்டாலும் போய்வந்து திரியுங்கோ, பொடி பெட்டையின்ரை மனப்போக்கையும் வாக்கையும் உங்களுக்குத்தான் அப்பமெண்டால் புட்டுக் காட்ட வேண்டிக் கிடக்கே. நாள் பூராவும் வீட்டுக்குள்ளை கிடந்து சூடடிக்கிற மாடுமாதிரி வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கிற எங்களுக்குத்தான் பொடி பெட்டை கிடந்து விடுகிற பெருமூச்சைப்பற்றித் தெரியும்''

''சரிசரி இப்ப என்னத்துக்கு அதிலை தொட்டு இதிலை தொட்டு வெள்ளாட்டு மேச்சலிலை பேசிக்கொண்டு போருய் ஏதோ இல்லாததுகள் பொல்லாததுகள் மாதிரி யெல்லே உன்ரை கதை போக்கும் கிடக்கு. உன்ரை கொப்பனும் கோத்தையும் உன்னை உடுத்த துணிக்கு மாற்றுத் துணி இல்லாமல் என்னேடை அனுப்பினது மாதிரி எண்டு நினைச்சியோ?''

''என்ரை ஆத்தையையும் அப்புவையும் இழுக்காவிட்டால் உங்களுக்கு எப்பவுமே பொச்சமடங்காது. அதுகள் என்ன செய்யுங்கள். அதுகளின்ரை காலநேரம் அப்பிடியாப் போச்சுது''

''ஏன் அதுகள் என்ன செய்ததுகள் எண்டு உனக்குத் தெரியாதோ? வரியம் தவருமல் பிள்ளை பெத்துக் கொண்டிருந்ததை மறந்திட்டியோ? சரிசரி வீணுக உந்த அராத்தல் கதையளை, கதைச்சுக் கொண்டிருப்பான். எங்கை உவன் கந்தையாவை இந்தப் பக்கம் காணயில்லை? காடேறி கொண்டு போட்டுதோ அவனை. அவர் வாற நேரம் நீங்கள் நில்லாயள். அது பாவத்துக்கும் என்ன சோலி, சுறட்டோ ஆர் கண்டது. அஞ்

சனமை போட்டுப்பார்த்தாலும் ஆளைப் பிடிங்கேலாதெண்டு அவர் வாற நேரமெல்லாம் புறுபுறுத்துக்கொண்டு போறார். ஆளையாள் கண்ணும்பூச்சி விளையாட்டு விளையாடிக்கொண்டு திரியுங்கோவன். நேற்றும் வந்தவர், குஞ்சரத்தின்ரை கதையையும் கதையோடை கதையாகக் கதைச்சிட்டுப் போறார்.''

''ஓகோ சங்கதி அப்பிடியோ! அவன்தான் உனக்குந்தக் கலியாணக் கதையைக் கதைச்சு உஷார்படுத்திவிட்டவன் எண்டு சொல்லன். சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் பண்டாரம் எண்ட கதையாக அவன் எல்லாத்திலையும் உப்பிடித்தான்.''

''ஏன் அந்தாளிலை ஏறிப்பாயிறியள்? ஏறச் சொன்னால் எருதுக்குக் கோவம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோவம் எண்ட மாதிரி உங்கடை கதையும் போக்ம். ஏதோ அவற்றை வீட்டுகு அலுவல் மாதிரியல்லலோ நீங்கள் ஏனோ தானோ எண்டு இருக்கிறியள்.''

''இது ஆற்றை வீட்டு அலுவலெண்டு அவனுக்கும் உனக்கும் தெரியாதோ அன்னம். குஞ்சரத்துக்கும், அவன்ரை மோனுக்கும் அவன்சாணைக்கூறை போட்டதையும் நீ மறந்திட்டியோ? வரட்டும் வடுவா சொல்லுறன் அவனுக்கு.''

''அந்தாள் இப்பவும் அதுக்கு ஒத்தைக் காலிலை நிக்குது. ஆனல் நீங்கள் என்ன சொல்லுவியளோ எண்டுதான் வாய் வைக்கக் கூசுறார்போலை கிடக்கு.''

''என்ன கூச்சமாம் அவனுக்கு?''

''ஏதோ அண்டைக்கிருந்த முசுப்பாத்தியிலை அப்படிச் செய்ததுக்காக இப்பபோய் பெண் கேட்டால் நீங்கள் கோவிச்சுப் போடுவியளோ எண்டு பயப்படுகிறார்போலை கிடக்கு.''

''என்ன அன்னம் நொடி போட்டுக்கொண்டு போறாய் விளக்கமாகத்தான் சொல்லன்.''

''இல்லை உங்கடை தரத்துக்கு இண்டைக்கு பெரிய பணக்காரரும், படிச்சவையும், உங்களோடை சம்மந்தம் பேசி வரயுக்கைக் இந்த பிச்சைக்காரக் கந்தையனை முத்தையா மதிப்பானோ எண்டு பயப்படுகிறார்.''

''அதாரிடி ஆத்தை பெரிய பணக்காரரும் படிச்சவையும் பெம்பிளை கேட்டு வந்ததாம்.''

''நான் உங்களுக்கு சொல்ல மறந்திட்டன். எங்கடை சொக்கலிங்கத்தாற்றை மோன் சுப்பிறிண்டன் உத்தியோகமாம். அண்டைக்கு சொக்கன் வந்து கேட்டவர். முதலியாற்றை மூத்தவன் முத்துக்குமாரு டாக்குத்தருக்குப் போனகிழமை வந்து வாய்வைச்சவை. எதுக்கும் அந்தாள் நிக்கயுக்கை வந்து கதைக்கிறது தான் நல்லது எண்டு சொல்லி அனுப்பிவிட்டன்.''

(தொடரும்)

# தே. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கங்கள் ;

# கல்வித்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

றொச்டேல் கூட்டுறவு முன்னோடிகள் நடைமுறைப் படுத்திய கூட்டுறவு ஆரம்பக் கொள்கைகளில்:

வறுமைக்கு, கல்வி அறிவின்மையே முதன்மைக் காரணம் என்பதனை ஆதார பூர்வமாகவும் அநுபவ வாயிலாகவும் உணர்ந்து 'கல்வி அபிவிருத்தி' என்னும் கொள்கையினை ஏற்றுக் கொண்டனர். இக்கொள்கையை கூட்டுறவு உறுப்பினர், அவர் தம் பிள்ளைகளுக்கு அமுலாக்கம் செய்ய தமது லாபத்தில் ஒரு பகுதியை கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்து கூட்டுறவுச் சங்கம் மூலம் கல்வியைநடைமுறைப் படுத்தியும் வந்தனர். றொச்டேல் முன்னோடிகளின் கூட்டுறவு ஆரம்பக் கொள்கைகளில் ஒன்றான 'கல்வி அபிவிருத்தி' (பாடசாலைக் கல்வி) 90 ஆண்டுகளின் பின்னர் மறுசீரமைக்கப்பட்டது.

**எஸ். கே. ஏ. ஆனந்தன்**

தேசிய மட்டத்தில் சாதாரண பாடசாலைக் கல்வி பரவலாக்கம் பெற்று அரசின் பொறுப்பில் கல்வி அபிவிருத்தி முறை சென்றடைந்தமையால் றொச்டேல், கூட்டுறவு முன்னோடிகளின் கூட்டுறவு ஆரம்பக் கொள்கைகளில் ஒன்றான 'கல்வி அபிவிருத்தி'க் கொள்கை 'கூட்டுறவுக் கல்வி' என மாற்றப்பட்டு விருப்பத்துக்குரிய கொள்கைகளில் ஒன்றாக ஏற்கப்பட்டது.

1937-ல் முதன்முதலாக சர்வதேச கூட்டுறவு ஒன்றிய நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளில் கூட்டுறவுக் கல்வி இடம் பெற்றிருந்தது. பின் 1966-ல் திருத்தப்பட்டு இன்றுவரை நடைமுறையில் இருந்துவரும் கூட்டுறவுக் கொள்கைப் பிரகடனத்திலும் இந்தக் 'கூட்டுறவுக் கல்வி' உள்ளடக்கப்பட்டுள்ளது.

இப்பிரகடனத்தின்படி கூட்டுறவு அமைப்பின் மூலக்கொள்கைகள், முறைமைகள் என்பனவை விளக்கிச் சகல கூட்டுறவுச்சங்கங்களும் தத்தமது அங்கத்தினர்கள், நிர்வாகிகள், பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவற்றினைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இது சனநாயக, பொருளியல் ரீதியாக இருத்தல் வேண்டும் எனச் சர்வதேச கூட்

டுறவுக் கொள்கையில் கூட்டுற வுக்கல்வி பற்றி வரையறுத்துள் ளனர்.

கூட்டுறவு அமைப்பானது சனநாயகத் தன்மையானதாக வும் அதேவேளை பொருளியல் முயற்சிகளுடன் தொடர்புடைய தாகவும் இருப்பதால் கூட்டுவுக் கல்வி மூலம் சனநாயகப்பண்பை யும் சுரண்டல் அற்ற பொருளி யல் சுபீட்சத்தையும் அடைய முடியும் என்பதனைத் தெளிவு படுத்துகின்றது. கூட்டுறவு அமைப்பு உற்பத்தி, விநியோகம், கடன், சந்தைப்படுத்தல், போன்ற பல்வேறு பொருளியல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. கூட் டுறவு அமைப்பை வழிநடத்து பவர்களுக்கு இந்த முயற்சிகள் பற்றிய அறிவுத் திறன்கள் இருந் தாலேயே அமைப்பின் முயற்சி, அங்கத்தவரின் பொருளாதார அபிவிருத்திகளை அடைய முடி யும்.

இந்தவகையில் எமது பிர தேசத்தில் அண்மைக்காலமாகப் பலரின் அக்கறையான கவன யீர்ப்பினைப் பெற்றுள்ள பனை வளத்தையும். தென்னை வளத் தினையும் மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி, சந்தைப் படுத்தல் முயற்சியினை மேற் கொண்டுவரும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி, விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களையும் அதன் சமாஜத்தினையும் நோக்குவோ மாயின் இங்கு பொதுக்கல்வி அபிவிருத்தி, கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி, தலைமைத்துவப் பயிற்சி, தொழில் நுட்பத்திறன் வாய்ந்த முகாமைத்துவம், பொறியியல், பதனிடல், சந்

---

## தூக்கணாங்

அழகிய கொண்டையும் நீண்ட வாலும் கொண்ட தூக் கணாங்குருவி சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய பல நிறங்களில் காணப்படுகின்றன. அழகிய தூக்கணாங்குருவி கொடூரமும் தந்திரமும் மிகுந்த பறவை. அதன் கொடூரம், தந்திரத்தின் வெளிப்பாடே அதன் அழகிய கூடாகும்.

தூக்கணாங்குருவி, மற்றப் பறவைகள் முட்டையிட்டு அடை படுத்திருக்கும்போது கீழ்ப்புற மாகச் சென்று அந்த முட்டை களில் ஓட்டை போட்டு அதன் திரவத்தை உறுஞ்சிவிடும். குஞ்சு களைக்கூடக்கொன்று தின்றுவிடும் தாய்ப்பறவைகள் மிக அவதான மாகப் படுத்திருக்கையிலேயே தூக்கணாங்குருவி இவ்வளவையும் செய்துவிடும். ஆகவேதான் மற் றப் பறவைகள் தன் முட்டைகளை யும் குஞ்சுகளையும் வேட்டையாடி விடாமல் இருக்கக் கீழ்ப்புறமாக வாசல் வைத்துத் தமது கூடுகளை அமைத்துக் கொள்கின்றன தூக் கணாங்குருவிகள்.

தைப்படுத்தல் முதலிய கல்விப் பயிற்சிகள் உடனடியாக மேற் கொள்ளப்படுவது அவசியமாகின் றன. இதேபோன்று பனை மூல வள ஆய்வுகள், இவ்வளத்தின்உற் பத்திறன்களைப் பெருக்கும் ஆய்வு களும் அவசியமாகின்றன.

'தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கங்களின் முகாமைத் துவம்' என்னும் தலைப்பிலான திரு. கி. குணரத்தினம் ('கற்ப கம், ஐப்பசி 1989 – மலர்; 10 இதழ்: 4 வெளியீடு) எழுதியுள்ள கட்டுரையும்,

'பனம் பொருள் உற்பத்தி யில் கள்ளின் தனித்தன்மை' என் னும் தலைப்பிலான திரு. இ. றவு டேந்திரன் ('கற்பகம்' ஆவணி– புரட்டாதி, 1987 – மலர்; 8 இதழ்; 6 வெளியீடு) எழுதியுள்ள கட்டுரையும்,

'பனை அபிவிருத்திக்கான அடிப்படை நிறுவனங்களைக்கட்டி யெழுப்புதல்' எனும் தலைப்பில் திரு. ஆ, ந. இராசேந்திரன் ('கற்பகம் 1988 பிற்பகுதி வெளி யீடுகள்) எழுதியுள்ள தொடர் கட்டுரைகளும்,

'பனை இனம்பெருக்க முறை கள் பற்றிய ஒரு பரிசீலனை' எனும் யாழ். பல்கலைக்கழக தாவரவியல்பீடப் பேராசிரியர் சோ. கந்தையாவின் ஆய்வுக் கட் டுரை ('கற்பகம்' கார்த்திகை – 1986 மலர்: 7 இதழ்: 9 வெளி யீடு) யும்,

'அபிவிருத்தித்திட்டம் 1987 யாருக்காக' எனும் வி. ஜி. தங்க வேல் எழுதிய ('கற்பகம்' 1987 முற்பகுதி வெளியீடுகள்) தொடர் கட்டுரைகளும்,

---

## குருவி

இக் கூடுகள் மெல்லிய கிளை களில், காற்றில் ஆடி அசைந்து கொண்டிருப்பதனால் அந்நியப் பறவைகள் கூட்டை அணு கினால்உள்ளிருக்கும்தாய்ப்பறவை அவற்றை அவதானித்துவிடும்.

தூக்கணாங் குருவிகளின் அழகில் மறைந்திருக்கும் தந்தி ரத்தையும் கொடூரத்தையும் அறிந்துள்ள குரங்குகள் அவற்றை மிகவும் வெறுக்கின்றன. தூக்கணாங்குருவிக் கூடுகளைக் கண் டால் கூடுமானவரை பிய்த்தெ றிந்துவிடும். குரங்குகளிடமிருந்து தப்பவும் தூக்கணாங்குருவி ஒரு தந்திரம் செய்துள்ளது.

அடர்ந்த தோப்புகளில் உறுதி யான கிளைகளில் தமது கூடுகளைக் கட்டாமல், தனி மரங்களில் மெல்லிய கிளைகளில் முக்கியமாக கமுகு, தென்னை போன்ற மரங்க ளின் ஓலைகளின் நுனியில் தமது கூடுகளைத் தொங்கவிடுகின்றன. இம்மரங்களில் குரங்குகள் ஏறு வது இல்லை.

தூக்கணாங்குருவிக்குகுரங்கு எதி ரியாவதுபோல், வலியான் எனப் படும் கரிக்குருவி மிக நெருங்கிய நண்பனாகும். இவ்விருபறவைகளும் இணைந்து பூச்சி, புழுக்களை வேட் டையாடும். இவை இணைசேர்ந்து வாழ்வதும் உண்டு.

இக்கட்டுரையின் கருத்தைவலியுறுத்துகின்றன, யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, தற்போதைய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் ஆகியோரும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கங்கள் தமது முயற்சிகளை புனரமைப்புச் செய்து அவற்றின் அங்கத்தவர்களின் சுய அபிவிருத்தியிலும் தொழில அபிவிருத்தியிலும் புதிய செயற் திட்டங்கள் கொண்டுவரப்படுவதை வலியுறுத்தி வருகின்றார்கள்.

எமது பிரதேசத்தின் பனை மூலவளத்தொழிலில் காலம் காலமாக ஈடுபட்டு இன்று இத்தொழிலில் இருந்து விடுபட்டுச் செல்லும் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டே இற்றைக்குப் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் தெங்கு – பனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டன. நடந்துமுடிந்த இந்தபதினெட்டுஆண்டுகால வரலாற்றில் பல சங்கங்களும், இச் சங்கங்களின் உரிமையாளர்களான பல அங்கத்தவர்களும் நொந்தும் நலிந்தும் விரக்தி அடைந்தும் இருப்பது உள்ளாராய்ந்த உண்மைகளாகும். இதற்கான காரணங்களையே பேசிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை.

உருண்டோடிய காலங்களில் கண்ட அநுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டு புதிய திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும். இதில் இக்கட்டுரையின் முன்பகுதியில் ரேச்டேல் கூட்டுறவு முன்னோடிகளின் கூட்டுறவு ஆரம்பக் கொள்கைகளில் 'கல்வி அபிவிருத்தி' இடம் பெற்றது போல் தெங்கு - பனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்திட்டங்களில் கல்வி அபிவிருத்தி துரித செயற் திட்டமாகக் கைக்கொள்ளப்பட்டு பொதுக்கல்வி வசதி-ஊக்குவிப்பு, முதியோர் கல்வி தலைமைத்துவப் பயிற்சிகள், தொழில் நுட்பத் திறன் வாய்ந்த முகாமைத்துவம், பொறியியல் - பதனிடல், சந்தைப்படுத்தல் முதலான கல்விப்பயிற்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்தல் அவசியமாகும். இதன்மூலம் இன்று ஆரம்பிக்க எத்தனப்படும் பனை மூலவளம் சார்ந்த புதியஉற்பத்தி முயற்சிகள் குறுகியகால எல்லையில் இப் பயிற்சி பெற்றவர்களின் அறிவு, நடைமுறை அநுபவங்களால் உறுதியாக்கப்படும். இத் திறவுகோல் நிச்சயமாக பனைமூலவள உற்பத்தியிலும் இவ்வளத்தினைப் பயன் படுத்தும் தொழிலாளர்கள் மத்தியிலும் சுபீட்சமான வளர்ச்சிக்கு வித்திடும்.

★

# தொழிலாளர் கல்வி - கருத்தரங்கு

1972-ம் ஆண்டு சீவல் தொழிலாளர் சமூகத்தின் சமூக பொருளாதார, கலை கலாசார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்க மாகஉருவாக்கப்பட்டதேதெங்கு டனம் பொருள் உற்பத்தி விற் பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் இச்சங்கங்கள் தமது நோக்கத் தில் ஓரளவு வளர்ச்சியை ஏற் படுத்தியுள்ளமையை யாரும் மறுக்கமாட்டார்கள். இருப்பி னும் இச்சங்கங்களின் அங்கத்த வர், பணியாளர், நெறியாளர் கள் இப்போதும் போதிய கூட் டுறவுச் சட்டங்களையும் அதன் கொள்கைகளையும், அதன் நோக் கங்களையும் புரியாத நிலையில்உள் ளமை வேதனைக்குரிய ஒன்ருகும்.

இந்நிலையில் இச்சங்கங்கள் தமது 18-ம் ஆண்டினைப் பூர்த்தி யாக்கும்நிலையில் புதிதாக வட பகுதிக்கு வந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (டனம் பொருள்) திரு. ரி. சபா ரத்தினம் அவர்களினது ஆலோ சனையால் யாழ். தொழிற் திணைக் களமும் யாழ். கூட்டுறவு அபி விருத்தித் திணைக்களமும், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை யினரும் ஒன்றிணைந்து இச்சங் கங்களின் நெறியாளர்கள், பணி யாளர்கள் ஆகியோருக்கு கல் விக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடாத்த முன்வந்துள் ளமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இக்கருத்தரங்கின் முதல் கட் டமாக சங்கங்களின் பொது முகாமையாளருக்கான கல்விக் கருத்தரங்கு கடந்த மாதம் 26, 27-ம் திகதிகளில் தொழில் உத் தியோகத்தர் திரு. கே. ஆர். தர்மலிங்கம் அவர்கள் தலைமை யில் ஆரம்பமாகியது. சிறந்த பயனளிக்கும் பல்வேறு தலைப்பு களிலான உரைகள் இடம் பெற் றதுடன் பல்வேறுவகையான புதிய தகவல்களையும் சட்டங் களையும் இம்முகாமையாளர்கள் அறியக் கூடியதாகவும் இருந் தன. இக்கருத்தரங்கில் உரை யாற்றிய தொழில் உதவி ஆணை யாளர் திரு. கே. சிவப்பிரகாசம் கூட்டுறவு உதவி ஆணையாளர் (பனம் பொருள்) திரு. ரி. சபா ரத்தினம், மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரு டைய கற்பித்தல் திறமையை முகாமையாளர்கள் வெகுவாகப் பாராட்டியதுடன் தலைமை தாங் கிய தொழில் உத்தியோகத்தர் திரு. கே. ஆர். தர்மலிங்கம் அவர்களின் தலைமைத்துவத் திற மையையும் காண முடிந்தது,

தொழில் உத்தியோகத்தர் களான திரு. ரி. நடராசா, திரு. ஏ. நயில்ஸ் ஆகியோருடைய சிறப்பான உரைகளையும், குடும் பநலமும் போசாக்கும் என்னும் பொருள் பற்றி உரையாற்றிய டாக்டர் வைத்தீஸ்வரன் அவர் களின் மறக்க முடியாத படிப் பித்தல் முறையும் மிக உன்னத மானதெனவும், மறந்துவிட முடி யாதொன்று எனவும் பலரும் பாராட்டினர்கள்.

**கி. சிவநேசன்**
பதில் முகாமையாளர்,
தெ. ப. பொ. கூ. ச. சமாஜம்.

## உங்களுக்குத் தெரியுமா? — அ. செந்தூரன்

1, "நான் வந்தேன், கண்டேன்; வென்றேன்!" என்று சொன்னவர் யார்?

2. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் முதன்முதலில் உறுப்பினரான பெண் யார்?

3. ஒலிம்பிக் போட்டிகளில் இன்றுவரை அதிகமான தங்கப் பதக்கங்களை (மெடல்) ப் பெற்று வரும் நாடு எது?


4. உலகிலேயே அதிக மக்கட் தொகையைக் கொண்ட நாடு எது?

5. முதன்முதலில் வெடிமருந்தைக் கண்டறிந்த நாடு எது?

6. ஆங்கில எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்யும் பொருட்டுத் தன் சொத்தின் ஒரு பகுயை ஒதுக்கிவைத்துச் சென்ற பிரபல்ய எழுத்தாளர் யார்?

**விடை:**

1. ஜூலியஸ் ஸீசர்.
2. கான் மாக்கிவெஸ்
3. ஐக்கிய அமெரிக்கா.
4, மக்கள் சீன குடியரசு.
5. சீனு.
6. பெர்னார்ட் ஷா.

### "நம்பிக்கை வை"

'மனிதர்களிடத்தில் நம்பிக்கை வை. அவர்கள் உன்னிடம் விசுவாசமாக இருப்பார்கள். அவர்களைப் பெரிய மனிதர்கள்போல் நடத்து. அவர்களும் பெரிய மனிதர்கள்போல் நடந்து காட்டுவார்கள்."


—காந்தியடிகள்.

**பனை வெல்லம், நிறை செல்வம், சுகவாழ்வே, நிறை செல்வம்.**

"மில்க்வைற்" சோப் மேலுறையிலிருந்து 25 திருக்குறள்கள் அனுப்பி "சிவ சிவ" ஸ்ரிக்கரும் "திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி" புத்தகத்தையும் பெறுக.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

# பாம்போஷா




பனை அபிவிருத்திச் சபை தயாரித்து வழங்கும் தரமான சத்துணவு.

## சகல கற்பகம் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

### வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

தொடர்பு:-

தலைமை அலுவலகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.



உமா பிறிண்டேர்ஸ், 32, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்,